In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.20 |
| Name: Saravanan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 22-07-2025.

**(A1 produced on V.C. A2 died. A3 to 9 absent.petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் மததிண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். 19.07.2023 ம் தேதி திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் தலைமைகாவலராக பணியாற்றி வந்தபோது அன்றைய தினம் இரவுப்பணியில் இருந்தேன். பேகம்பூரில் இரவு ரோந்தில் இருந்தபோது 21 மணிக்கு நிலையத்தில் இருந்து புறப்பட்டு பேகம்பூர் ஏரியாவுக்குட்பட்ட பகுதியில் ரோந்து பணிபுரிந்து வந்தபோது இரவு 11 மணிக்கு மேல் மேற்படி பகுதியில் உள்ள கடைகளை அடைக்கச்சொல்லி அறிவுறுத்தினேன். பின்னர் பேகம்பூர் பகுதியில் உள்ள கடைகளை அடைத்த பின் சவரியார்பாளையம் சென்று மீண்டும் இரவு 12 மணிக்கு பேகம்பூர் பகுதிக்கு திரும்பி வந்தபோது பொன்ராம் பிரியாணிகடை சந்திப்பில் பூட்டியிருந்த பாரூக் டீக்கடை அருகில் உள்ள சந்தில் எனக்கு ஏற்கனவே நன்குதெரிந்த செல்லாண்டியம்மன்கோவில் தெருவைச்சேர்ந்த அல்லாசி என்பவரும் அவருடன் சிலரும் (4 பேர்கள்) பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களை அழைத்து இரவு நேரத்தில் இங்கு நிற்கக்கூடாது என எச்சரித்தேன். அவர்கள் அனைவரும் கலைந்து ஒரு சிவப்பு நிற காரிலும், இரண்டு இருசக்கர

வாகனங்களிலும் ஏறிச்சென்றுவிட்டார்கள். பின்னர் மறுநாள் பட்டறை சரவணனை கொலை செய்தது பற்றி தெரிந்துகொண்டேன். அந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தபோது முதல்நாள் இரவில் நான் பார்த்ததை ஆய்வாளரிடம் சொன்னேன். இதுகுறித்து ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

அஞ்சலி ரவுண்டானா அருகில் ஒரு பொன்ராம் பிரியாணிக்கடை உள்ளது என்றால் சரிதான். திண்டுக்கல் நகர் தெற்கு காவல்நிலையத்தில் 3 பீட் உள்ளது. பேகம்பூர் எத்தனாவது பீட்டை சேர்ந்தது என ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது 1வது பீட்டைச்சேர்ந்தது. நிலைய எழுத்தரிடம் டுட்டி ரோஸ்டர் உள்ளது என்றால் சரிதான். அந்த டுட்டி ரோஸ்டரில் எந்த எந்த காவலர் எந்த எந்த பீட்டிற்கு டுட்டிக்கு செல்கிறார்கள் என்பது இருக்கும் என்றால் சரிதான். டுட்டி முடிந்த பின்னர் காவல் நிலையத்திற்கு வந்து எழுத்தரிடம் அறிக்கை செய்து பாக்கெட் டைரியிலும் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். மேற்படி டுட்டி ரோஸ்டர்களையும் பாக்கெட் நோட்டையும் பார்த்தால்தான் நான் உண்மையிலேயே அன்றைய தினம் பேகம்பூரில் இரவு ரோந்து செய்தேனா என்பது தெரியவரும் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரித்தபோது 19.07.2023ம் தேதி இரவு 12 மணிக்கு 1வது எதிரியையும் அவரைச் சார்ந்தவர்களையும் பார்த்தேன், அவர்களை எச்சரித்தேன், அவர்களை காரிலும் பைக்கிலும் ஏறிச்சென்றார்கள் என்பது பற்றி டுட்டி ரோஸ்டரில் பணிமுடிந்து வந்து எழுதிக்கொடுத்தேனா என்றால் எழுதிக்கொடுக்கவில்லை. 19.07.2023ம் தேதி நான் பேகம்பூரில் இரவு ரோந்து பணிக்கு சென்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அன்றைய தினம் இரவு அல்லாசியுடன் 4 பேர் நின்ற விவரத்தையும், எத்தனை இருசக்கர வாகனங்கள் நின்றது என்ற விவரத்தையும் ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஆய்வாளர் என்னை 20.07.2023 ம்தேதியன்று விசாரணை செய்தார். 20.07.2023 ம் தேதி என்னை விசாரித்ததாக சொல்வது பொய் என்றும் 10 நாட்கள் கழித்துதான் விசாரித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் காவல்துறையில் பணியாற்றுவதால் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.22 15:12:11 +0530

Principal District Judge,
Dindigul.